## பரிந்துரைகள்:

பின்வரும் செயற்பாடுகளில் முழுமையான ஈடுபாட்டுடன் இணைந்துகொள்ள அனைத்து கிறிஸ்தவர்களும் அழைக்கப்படுகின்றனர்.

1) **குடும்ப மட்டத்தில்** : நாட்டிற்கு சேவை புரிய நேர்மைமிக்க தலைவரைத் தெரிவுசெய்யும் முகமாக அன்றாடம் திருச்செபமாலை சொல்வதும், செபங்களை ஒப்புக்கொடுத்தலும்.

2) **சமூக மட்டத்தில்** : செப அமர்வுகளை நடாத்தலும் குழு முறையிலான செபங்களை ஒப்புக்கொடுத்தல் மூலம் பரிசுத்த ஆவியின் பரிந்துரையை ஆசித்தல்.

3) **பங்கு மட்டத்தில்** : பங்கு தந்தையர்களின் வழிகாட்டுதலுடன் இத்தகவலை அனைத்து பங்கு மக்களிடையேயும் பகிர்ந்துகொள்ளுதல்.

4) **மறைக்கோட்ட மட்டத்தில்** : நடுநிலையான பொருத்தமிக்க வளவாளர்களின் உதவியுடன் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்.

5) **மறைமாவட்ட மட்டத்தில்** : சமூக தலைவர்கள், பக்தி சபைகளை அறிவூட்டும் விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்தல்.

6) **ஞாயிறு திருப்பலிகளில்** : இந்த நோக்கங்களைக் கருத்திற்கொண்டு ஞாயிறு வழிபாட்டில் செபங்களை (விசுவாசிகளின் மன்றாட்டுக்கள்) ஒப்புக்கொடுத்தல்.


கத்தோலிக்க நீதி, சமாதான, மனித அபிவிருத்திக்கான தேசிய ஆணைக்குழு

கரித்தாஸ் இலங்கை - செடெக்

133, கின்சி வீதி

கொழும்பு 08.

011-2691885


# கரித்தாஸ் இலங்கை – செடெக் சமூக, பொருளாதார அபிவிருத்தி நிலையம்

### எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொருத்தமான வேட்பாளரைத் தெரிவு செய்யும் வகையில், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் நீதி, சமாதானம் மற்றும் மனித அபிவிருத்திக்கான ஆணைக்குழு வெளியிடும் வழிகாட்டல் அறிக்கை

## முன்னுரை

இலங்கை சனநாயக சோசலிகச் குடியரசின் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல், எதிர்வரும் நவம்பர் மாதம் 16ம் திகதி இடம்பெறும் என தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார். இலங்கையின் மொத்த சனத்தொகையான 22 மில்லியன் மக்களில் 16 மில்லியன் நபர்கள் இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

நீதி, சமாதானம் மற்றும் மனித அபிவிருத்திக்கான கத்தோலிக்க தேசிய ஆணைக்குழுவானது, கிறிஸ்தவ சமூகப் படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டு, நாட்டின் தற்போதைய அரசியல் மற்றும் சமூக நிலவரங்களை நன்கு ஆய்வுசெய்ய முற்படுகிறது. குறிப்பாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைக் கருத்தில் கொண்டு தற்போதைய தெளிவில்லாத அரசியல் கலாச்சாரம், மக்கள் முகங்கொடுக்கும் பல்வேறு சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக எமது கவனம் அமைகிறது.

## தேசிய பிரச்சினைகள் மற்றும் தீர்வுக்கான செயற்திட்டங்கள்

கீழ்க் காணப்படும் விடயங்கள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

1. இனங்கள் மற்றும் மதங்களுக்கிடையிலான முரண்பாடுகள், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினைகள், காணிப் பிரச்சினை என்பவற்றைத் தீர்ப்பதற்கான வினைத்திறன் மிக்க ஒரு செயற்திட்டத்தை முன்வைத்தல்.

2. அனைத்து சமூகங்களுக்கும் பயனளிக்கும், அதிகார பரவலாக்கலை உறுதிசெய்யும் வகையிலான ஒரு புதிய அரசியல் யாப்பை சகல தரப்பினருடனும் கலந்தாலோசித்து அவர்களின் பரிந்துரைகளை உள்ளடக்கி உருவாக்குதல்.

3. இலஞ்சம் பெறுதல் மற்றும் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டுள்ள அரசியல்வாதிகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எதிராக பக்கச் சார்பற்றதும் நியாயமானதுமான சட்ட நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுத்தல்.

4. சட்ட விரோத போதைவஸ்து கடத்தல், பாதாள கோஷ்டியினரின் ஆயுதத் தாக்குதல் நடவடிக்கைகள் மற்றும் சமூக நலனுக்கு முரணான ஊடகச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கும் நீக்குவதற்கும் அதிகாரபூர்வ விசேட செயற்குழுவை நியமித்தல்.

5. சமத்துவமான வளர்ச்சியை உறுதிசெய்யவும் சர்வதேசக் கடன்களைக் குறைப்பதற்குமான சாத்தியமான தேசிய பொருளாதாரக் கொள்கையொன்றை சுதந்திரமான தொழில்சார் நிபுணர்களின் ஆலோசனையுடன் உருவாக்குதல்.

6. சகல அரச மற்றும் அரச சார்பற்ற தனியார் நிறுவனங்களிலும் நல்லாட்சியை உறுதிசெய்து அதை மேற்பார்வை செய்வதற்கான பொறிமுறையை ஏற்படுத்தல் மற்றும் நாட்டின் சட்ட ஒழுங்குமுறையை உறுதிசெய்தல்.

7. நீதி மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் கூடிய சுதந்திரமான நீதித்துறையினை நிறுவுதல்.

8. விவசாய மற்றும் மீனவ சமூகத்தினர் முகங்கொடுக்கும் பிரச்சினைகளான சந்தைப்படுத்தல் வாய்ப்புக்கள் இல்லாமை, உற்பத்திகளுக்கு நியாயமான விலை விதிக்கப்படாமை, இயற்கை அனர்த்தங்கள், நுண் கடன் பிரச்சினைகள், வறுமை, சுற்றாடல் பிரச்சினைகள், கால நிலை மாற்றம் மற்றும் வேலையின்மை என்பவற்றைத் தீர்ப்பதற்காகவும் அவர்களின் உரிமைகள் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையிலும் தேசிய கொள்கையொன்றை முன்வைத்தல்.

9. தோட்டத் தொழிலாளர்களின் கீழ்மட்ட வாழ்வாதார நிலை, அடிப்படை வசதிகளின்மை, நியாயமான ஊதியத்தைப் பெறும் உரிமை போன்ற பிரச்சனைகளுக்குத் தீர்வு காணலும் அவர்களுக்கான கௌரவமான வாழ்வு நிலையை ஏற்படுத்தலும்.

10. வெளிநாட்டுக்கான புலம்பெயர்வின் போது காணப்படும் மோசடியான செயற்பாடுகள், ஆட்கடத்தல், சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல் போன்ற பிரச்சினைகளை இல்லாதொழித்தல் மற்றும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் முகவர் நிறுவனங்களைக் கண்டறிவதற்கான கண்காணிப்பு பொறிமுறையை உருவாக்குதல்.

## கிறிஸ்தவ சிந்தனைகளின் பிரதிபலிப்பு

1. "மனித வாழ்க்கை புனிதமானது. ஏனெனில், தொடக்கத்திலிருந்து இறைவனின் படைப்புக்கான நடவடிக்கைகளோடு சம்பந்தப்பட்டது. அது எப்போதும் படைத்தவரோடு விசேட தொடர்புபட்டு நிலைத்து நிற்கின்றது. அவரே அதன் தனித்துவமுடைய முடிவாகவும் இருக்கின்றார். கடவுள் ஒருவர் மாத்திரமே வாழ்க்கையின் தொடக்கத்திலிருந்து முடிவு வரை தலைவனாக விளங்குகின்றார். எந்தவொரு நபரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒரு குற்றமற்ற மனித உயிரை நேரடியாக அழிக்கும் உரிமையைக் கோர முடியாது." (CCC-2258)
   சமூகம், சமூக நீதிக்கு உத்தரவாதமளிக்க வேண்டும். அதற்கு சமூகம் சில நிபந்தனைகளை விதிக்கிறது. மற்றவர்கள் அல்லது தனிநபர்கள் அவர்களுக்கு உரியவற்றை அவர்களுடைய இயல்புக்கும் தொழிலுக்கும் ஏற்ற வகையில் பெறுவதற்கு இடமளிக்க வேண்டும். சமூக நீதி பொதுநலத்துடனும் அதிகாரப் பயன்பாட்டுடனும் தொடர்புடையதாகும். (CCC-1928)

2. "அதிகாரம் சட்டரீதியாக பிரயோகிக்கப்படும் போது, சம்பந்தப்பட்ட தரப்பினரின் பொது நலனைக் கருத்தில் கொண்டதாகவும் நல்லொழுக்கமுள்ள, நியாயமான வழிகளில் பெறப்பட்டதாகவும் அமைய வேண்டும். ஆட்சியாளர்களால் அநீதியான சட்டங்கள் இயற்றப்படும் போதோ, அல்லது நெறிமுறைக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்படும் போதோ அந்த வகையான ஏற்பாடுகள் மனச்சாட்சிக்கு ஏற்புடையதாக அமையாது. அத்தகைய விடயங்களில் அதிகாரம் முழுமையாக தகர்க்கப்பட்டு வெட்கக்கேடான துஸ்பிரயோகங்களில் முடிவடையும்." (CCC-1903)

3. "போதைப்பொருள் பாவனை ஒரு பாவச்செயலாகும். ஏனெனில் அது சுய அழிப்பு நடவடிக்கையுமாகும். எனவே, அது கடவுள் அன்பின் நிமித்தம் தந்த வாழ்க்கைக்கு எதிரான குற்றமுமாகும். எந்த வகையான சட்டரீதியான போதைப்பொருட்கள் (மதுசாரம், மருந்துவகை, புகையிலை) அதைவிட அதிகமாக தடைசெய்யப்பட்ட போதைப்பொருட்களில் தங்கியிருத்தல் சுதந்திரத்திற்கு மாற்றீடான அடிமைத்தனமாகும். அத்தகைய ஒருவன் மனித மாண்பையும் சுயாதீனத்தையும் இழக்கின்றான். எனவே, கடவுளுக்கு எதிரான பாவத்தைக் கட்டிகொள்கின்றான்." (YouCat-389)

4. அரச அதிகாரிகள் மனிதனுடைய அடிப்படை உரிமைகளையும் ஒவ்வொருவரையும் மதிக்க கடமைப்பட்டுள்ளார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மனித நேயத்துடன் நீதியை வழங்க வேண்டும். முக்கியமாக குடும்பங்களையும் முன்னுரிமை படுத்தப்படாதவர்களையும் பின்தங்கியோரையும் கவனத்தில் கொள்ள வேண்டும். (CCC-2237)

5. புனித ஜோன் கிறிஸ்தோஸ்தம் இதை பலமாக நினைவுபடுத்துகிறார். "எமது பொருட்களை ஏழைகளுடன் பகிர்தலை மறுத்தல், அவர்களிடமிருந்து களவாடுவதற்கும் அவர்களது வாழ்க்கையை பறித்தெடுப்பதற்கும் ஒப்பாகும். எம்மிடத்தில் உள்ள பொருட்களும் சொத்துக்களும் எம்முடையதல்ல, அவர்களுடைதே."

6. "மானிட நபர்கள் பற்றிய வர்த்தகம், மானிட மாண்புக்கு எதிரான அதிர்ச்சி தரும் ஒரு குற்ற செயலாவதோடு, மனித அடிப்படை உரிமைகளை மீறும் ஒரு கெடுதியான செயலுமாகும். இச்சந்தர்ப்பங்கள் பண்புள்ள மனிதர்களால் பகிரப்படும் மனித மதிப்பீடுகளை அவமதிக்கும் நடவடிக்கையாகும். அச்சுறுத்தும் மனித வர்த்தக வளர்ச்சி ஒரு அழுத்தம் கொடுக்கும் அரசியல் சமூகப் பொருளாதாரப் பிரச்சனையாக உருவெடுத்து, உலக மயமாக்கும் நடவடிக்கையில் இணைந்து கொண்டுள்ளது. அது தனி நாடுகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தும் அபாயகரமான ஒரு தோற்றத்தை அளிக்கின்றது. அத்தோடு சர்வதேச நீதியையும் தாமதப்படுத்துகின்றது." 21ம் "நூற்றாண்டு அடிமைத்தனத்தின் தருணமாகும் - மனித உரிமைகள் பரிமாணத்திற்கு மனித உயிர்களின் கடத்தல்" - பாப்பிறை 2ம் அருள்ப்பர் சின்னப்பர் வைகாசி 15, 2002 திகதியிட்ட கடிதம்.
   '

7. விசேடமாக நல்லொழுக்கத்திலும் மத விடயங்களிலும் சுதந்திரத்தை பிரயோகிக்கும் உரிமையானது மனித வர்க்கத்தின் மாற்ற முடியாத தேவையாகும்." (CCC-1738 pg. 332)

8. நீதியை நிலைநாட்டும் உரிமையானது, வறிய நாடுகளின் அபிவிருத்திக்கான விருப்பத்தைப் பெறுவதாகும். இந்த விருப்பம் இல்லாதுவிட்டால், அவர்கள் சர்வதேச பொருளாதார சக்திகளின் பலிக்கடாக்களாகி விடுவர். எனவே, அவர்கள் எதிர்காலத்தை தங்களுடைய சொந்தக் கரங்களில் எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு அவர்களுடைய சொந்த பொருளாதார அரசியல், சமூக முன்னேற்றத்தில் பங்குகொள்ளும் உரிமை உண்டு. சிலர் சார்பாக நீதிக்கான நடவடிக்கைகளை விசேடவிதமாக தொடர வேண்டி உள்ளது. உதாரணமாக புலம்பெயர்ந்தோர், பண்ணைத் தொழிலாளர்கள், இடம்பெயர்ந்தோர், மத சுதந்திரம் மற்றும் குடியியல் உரிமைகள் மறுக்கப்பட்டோர் இதில் அடங்குவர்.
   (Justice in the World – Para. 18)

9. உண்மையான முன்னேற்றத்தை அடைய, தேவைகளை அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். தெரிவுசெய்யப்பட்ட அரசியல் முறைமைக்குள் அபிவிருத்தியை ஒழுங்குபடுத்த பொருளாதாரமும், பங்குபற்றுதலும் அவசியம். பங்குகொள்ளுதல் என்பது ஒரு உரிமையாகவுள்ளது. அது பொருளாதார, சமூக, அரசியல் களங்களில் பிரயோகிக்கப்படல் வேண்டும்.
   (Justice in the World – Para. 18)

10. பல்வேறு வழிகளில் ஒடுக்கப்பட்டு, நற்செயல்கள் மௌனிக்கப்பட்டு, வாயடைத்து அநீதிக்குப் பலியாகியுள்ள மனிதர்கள், நாடுகள் மட்டில் எமது கவனம் செல்ல வேண்டும். (Justice in the World – Para.20)

## முடிவுரை

இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் சமூகப் பணி நிறுவனமான கரித்தாஸ் இலங்கை – செடெக், பொது மக்களை விசேடமாக கிறிஸ்தவ சமூகத்தினரை இந்நாட்டின் பிரஜைகளாக தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி, மிகப் பொருத்தமான வேட்பாளரைத் தெரிவுசெய்வது தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்த இந்த அறிக்கையை முன்வைக்கிறது.

தற்போது காணப்படும் தெளிவற்ற அரசியல் நிலையானது, எமது நாட்டினை மிகவும் இக்கட்டான நிலைக்கு கொண்டுச் சென்றிருப்பதோடு, இந்நிலையிலிருந்து நாம் மீள்வது அவசியமானதாக அமைகின்றது.

1. தொடர்ச்சியான நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக உடனடியான மாற்றமொன்றைக் கோருவதற்கு இந்நாட்டு மக்கள் வலுவூட்டப்பட வேண்டும்.

2. இன, மத அரசியல் பேதங்களின்றி மக்களை ஒன்றிணைப்பதற்காக, நிலையானதும் உறுதியானதுமான ஒரு மக்கள் அமைப்பு அவசியமாகும்.

3. இவ்வாறான சந்தர்ப்பத்தில் சமய நம்பிக்கைக் கொண்ட ஒரு சமூகம் மிக முக்கியமான பங்கை வகிக்கிறது.

4. திருச்சபையானது, இம்முயற்சிக்கு பின்வரும் வழிமுறைகளில் சிறந்த ஒரு தலைமைத்துவத்தை வழங்கலாம்:

   அ) மக்கள் மத்தியில் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் சமாதானமான, சனநாயகத்துடன் கூடிய ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி வாக்குச் சீட்டுக்குரிய வல்லமை, திறன் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

   ஆ) தற்கால தேர்தல் சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் தொடர்பாக வாக்காளர்களுக்கு அறிவூட்டல்.

   இ) அரசியல் அனுபவம், முதிர்ச்சி, நீதி மற்றும் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான தன்னார்வம், நல்லாட்சிக்கான அர்ப்பணிப்பு, மனித உரிமைகள் மற்றும் சமத்துவத்துக்கான மதிப்பு, ஏழை எளியவர்கள் தொடர்பாக கரிசனை, கட்சியின் எதிர்பார்ப்புகளுக்கு மேலாக மக்களின் நலன் கருதி செயற்படும் தன்மை போன்ற பண்புகளை முன்னிலைப்படுத்தவும், சமூகத்திற்கு முன்னுதாரணமான, சிறந்த நபர்களைத் தெரிந்து அவர்களுக்கு வாக்களிக்க மக்களை அறிவூட்டல்.

   ஈ) வாக்களிப்பட்டு தெரிவு செய்யப்பட்ட தலைவர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு அமைவாக செயற்படுகின்றமையை உறுதிசெய்ய வாக்காளர்களை ஊக்குவித்தல்.

   உ) ஆட்சியில் உள்ளவர்களின் இணக்கப்பாடு, பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்பவர்களாகவும் அதை மேற்பார்வை பொறிமுறைகளை செயற்படுத்துபவர்களாகவும் இருத்தல்.

இலங்கை வாழ் அனைத்து மக்கள் மத்தியிலும் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துடன் கூடிய ஒரு யுகத்தை ஏற்படுத்தும் தலைவருக்கு வாக்களிக்க அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் தேவையான வழிகாட்டலையும் தலைமைத்துவத்தையும் திருச்சபையானது வழங்கி நிற்கும்.

இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் ஆயர் பேரவையின் ஒப்புதல் அளிக்கப்பட்டு, கிறிஸ்தவ சமூகத்தினரால் முன்வைக்கப்படும் இந்த வேண்டுகளுக்கு பதிலளிக்க அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் அழைக்கப்படுகின்றனர். இலங்கை கரித்தாஸ் நிறுவனமானது, பரிசுத்த பாப்பிறை பிரான்சிஸ் ஆண்டகையின் வாக்கை முன்னிறுத்தி இவ்வழிக்காட்டியை உருவாக்கியுள்ளது.

அனைத்து வேட்பாளர்களும் தேசிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள், அதற்கான கால அவகாசம் மற்றும் தேவையான நிதி வழங்கல் முறைமைகளை முன்வைப்பார்கள் என திருச்சபை எதிர்பார்க்கிறது. இம்முன்வைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு மிகப் பொருத்தமான வேட்பாளரை தெரிவுசெய்ய மக்கள் வழிநடத்தப்படுவார்கள்.